1974 மார்ச் 20]

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : தலைவரவர்களே, 1972-லே Pre-Investigation Organisation, முதலீட்டு நில ஆய்வு நிறுவனம் முடிவு எடுத்தார்கள். நான் முதலில் சொன்னதைப்போல் பொதுப்பணித்துறை மூலம் வரை படங்கள் இன்னும் தயார் செய்யப்படவில்லை. அவைகள் வந்ததற்குப் பிறகு இதை விரைவில் எடுத்து நடத்த முடியும்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தலைவரவர்களே, சின்ன முட்டத்தை அடுத்த கன்னியாகுமரி பகுதியிலே அதிகமாக மீன் கிடைக்கின்ற மீன் மடை என்று சொல்லப்படும் அளவில் எப்பொழுதும் மீன் கிடைக்கும் நிலப்பாடுகள் இருக்கின்றன. எனவே, உடனடியாக மத்திய அரசாங்கத்தோடு தொடர்பு கொண்டு இதை அமலாக்குவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : தலைவரவர்களே, மதிப்பீடுகளும், வரை படங்களும் பொதுப்பணித் துறை யிலிருந்து இந்தத் துறைக்கு வந்தவுடன் இந்தத் துறை மத்திய அரசோடு தொடர்பு கொண்டு இதற்கான நடவடிக்கைகளை மேற் கொள்ளும்.

இரும்பு-சிமிட்டிப் படகு கட்டும் தளம்

* 517 வின—**திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இரும்பு-சிமிட்டிப் படகு கட்டும் தளம் அமைப்பதில் சிக்கல் ஏதேனும் இருந்ததா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

(உ) தற்போது மேற்படி படகு கட்டும் தளம் எங்கே நிறுவப் பட்டுள்ளது ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : (அ), (இ) & (உ) போர்நினைவுச் சின்னத்திற்கருகில் கூவம் ஆற்றிற்கு வடக்கே இரும்பு, சிமிட்டிப் படகு கட்டும் தளத்தை அமைப்பது பொருத்த மற்றதெனக் கருதப்பட்டு அச் செயற்குறிப்பு கைவிடப்பட்டதால்,

இரும்பு சிமிட்டிப்படகு கட்டும் தளம் தாற்காலிகமாக மெரினா கடற்கரையில் கூரைக் கொட்டகைகளில் செயற்பட்டு வருகின்றது. அண்மையில் துறைமுகப் பொறுப்புக்கழக வளவுகளுக்குள் இப்படகு கட்டும் தளத்தை அமைப்பதற்காக நிலமொன்று மீனளத் துறை இயக்குநரால் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. இந்த நிலத்தை மீனளத்துறைக்கு ஒதுக்கிக்கொடுப்பதற்குச் சென்னைத் துறைமுக பொறுப்புக் கழகத்தின் இசைவு எதிர்பார்க்கப் படுகிறது. இந்த நிலத்தைக் குத்தகைக்கு விடுவதற்கு சென்னைத் துறைமுகப் பொறுப்புக்கழகம் உடன்பட்டதும் இரும்பு-சிமிட்டிப் படகுகள் கட்டுவதற்காக, ஓரளவு நிலையான தன்மை வாய்ந்த படகு தளமொன்றை நிறுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப் படும்.

திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தலைவரவர்களே, கடற்கரைப் பகுதியில் தற்பொழுது இந்தப் பணி நடைபெறுவதால் சில சமயங்களில் தொல்லைகள் ஏற்படுவதாகச் சொல்லப்படுகிறது. ஆகவே, விரைவில் வேறு இடத்திற்கு இதை மாற்றுவதற்கு அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: தலைவரவர்களே, 'மெட்ரூஸ் போர்ட் டிரஸ்ட்'க்கு எழுதியிருப்பதாகச் சொன்னேன். வேறு இடம் கேட்டிருக்கிறோம். போர்ட் டிரஸ்ட் காம்பவுண்டுக்குள் இடம் கேட்டிருக்கிறோம். அது கிடைத்ததற்குப் பிறகு மாற்றப் படும்.

திரு. க. உரா. எட்மண்ட்: தலைவரவர்களே, சென்னை மெரினா கடற்கரையில் இந்த 'ஃபெர்ரோ-சிமெண்ட்' போட்டுகளைச் செய்யும் வேலையை இரண்டாண்டுகளுக்கு முன்னால் ஆரம்பித் தார்கள். இப்படிப்பட்ட படகுகள் செய்யப்பட்டு கடலில் தொழிலில் ஈடுபடுத்தப்பட்டிருக்கிறார்களா? எத்தனை போட்டுகள் கடலில் ஓட விடப்பட்டிருக்கின்றன?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: தலைவரவர்களே, ஒரு படகு பணி செய்கிறது, 5 படகுகள் கட்டி முடிக்கப்படும் தறுவாயில் உள்ளன.